நகல்:

சுருக்கம்.

குடிநீர் விநியோகம் — நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் சொந்த குடியிருப்பில் இல்லாது வேறு வீடுகளில் குடியிருக்கும்போது அந்த வீட்டின் உரிமையாளர் பெயரில் குடிநீர் இணைப்பு வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி3) துறை

அரசு ஆணை (நிலை) எண்.39 நாள்: 24.3.2000

படிக்க:

அரசு ஆணை (நிலை) எண்.47 ந.நி.கு.வ.துறை நாள் 9.2.99.

நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ந.க.எண்.89777/குவ1/ நாள் 5.1.2000.

-----

அந்தந்த நகராட்சி குடிநீர்த்திட்டங்களில் அனுமதிக்கப்பட்ட உயர்ந்த பட்ச குடிநீர் இணைப்பு எண்ணிக்கைக்கு மேற்படாத வகையில் அந்தந்த நகர்மன்ற எல்லைக்குள் வசிக்கும் பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், நகர்மன்றத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் சொந்த குடியிருப்புக்கு முன்னுரிமையடிப்படையில் குடிநீர் இணைப்பு வழங்குவது குறித்து நகராட்சி மன்றங்களே முடிவெடுக்கலாம் என மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்காணும் அரசாணையின் அடிப்படையில் சொந்த குடியிருப்பில் இல்லாத நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்களின் உறவினர்களின் பெயர்களில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் இணைப்புவழங்கக் கோரும் கோரிக்கை விண்ணப்பங்கள் வருகின்றன என்றும் அவற்றை நிறைவேற்ற இயலவில்லை என்றும் அவ்வாறு பெறப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். ஆனால் மேற்கூறிய கோரிக்கைகள் குறித்து பல்வேறு விண்ணப்பங்கள் வரப்பெறுவதால் நகர்மன்றத்தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் தங்கள் உறவினர்கள் குடியிருப்பில் உள்ளவர்கள், அல்லது வாடகை வீட்டில் குடியிருக்கும் பட்சத்தில் ஒரேஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் அந்தந்த நகராட்சி குடிநீர் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள உயர்ந்த பட்ச குடிநீர் குழாய் எண்ணிக்கைக்கு மேற்படாமல 5 வருடத்திற்கு ஒருமுறை (பதவிகாலத்திற்குள்) மட்டும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் பரிந்துரையை ஏற்று நகர்மன்றத்தலைவர் மற்றும் துணைத்தலைவர் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் சொந்த குடியிருப்பில் இல்லாது தங்கள் உறவினர் வீட்டிலோ அல்லது வாடகை வீட்டிலோ குடியிருக்கும் பட்சத்தில் ஏற்கனவே பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிட்டவாறு அந்தந்த நகராட்சி குடிநீர்த்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கைக்கு மேற்படாமல் அவ்வாறு பதவிக்காலமான 5 வருடத்திற்குள் ஒருமுறை அவர்கள் குடியிருக்கும் ஒரு வீட்டுக்கு ஒரேஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும் வழக்கமான நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டும் முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு அனுமதி அளிக்கலாம் என்றும் அது குறித்த தனி கேட்புகளின் மீதான முடிவுகளை சம்பந்தப்பட்ட நகர்மன்றங்களே எடுக்கலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- சு. மாலதி,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//